5. வேளாண்மை மற்றும் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை ஆகிய துறைகள் தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட இந்த அறிவிப்புக்கு வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். புரட்சித் தலைவர் கோவை மாவட்டத்தினை இரண்டாகப் பிரித்து, ஈரோடு மாவட்டத்தை உருவாக்கினார். இன்று அந்த பொன்மனத் தலைவர் நூற்றாண்டு விழாவைக் காணுகிறபோது, 52 கோடி ரூபாய்க்கு அனைத்து அலுவலகங்களையும் ஒருங்கிணைக்கின்ற அளவிற்கு நிதியினை ஒதுக்கித் தந்திருக்கின்றார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். சட்டமன்ற உறுப்பினர்கள், (மேசையைத் தட்டும் ஒலி) பொது மக்கள் சார்பாக நெஞ்சம் நிறைந்த வாழ்த்துகளை புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழியில் நடைபெறுகின்ற அரசிற்கும், மாண்புமிகு முதலமைச்சருக்கும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வான் கொடுக்கும் மழையோ இரண்டு மாதம், வயல் கொடுக்கும் பலனோ மூன்று மாதம்" ஆனால் அம்மா வழி நடக்கின்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் அவர்கள் விவசாயிகளுக்குத் தினந்தோறும் அவர்களின் வாழ்வாதாரத்திற்கு, அவர்கள் வாழ்வு உயர்வதற்கு நிதியை வாரி, வாரி வழங்குகின்றார்.*

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழியில் வந்த மரியாதைக்குரிய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு வேளாண் பெருமக்கள் சார்பாகவும், அனைத்து தமிழக மக்களின் சார்பாகவும், இந்த அறிவிப்புகளுக்கு முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தோட்டக்கலைப் பயிர்கள் சாகுபடியை ஊக்குவிக்க ரூ.9 கோடியும், சூரியசக்திமூலம் இயங்கும் பம்பு செட்டுகள் நிறுவி, விவசாயிகளின் வாழ்வில் ஒளியேற்ற ஆயிரம் விவசாயிகளுக்கு

2017 ஜூலை 11] [திரு. இரா. துரைக்கண்ணு]

மானியத்தில் வழங்க ரூபாய் 29 கோடியே 94 இலட்சமும், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின்கீழ் உயிரி தொழில்நுட்ப மகத்துவ மையம் அமைக்க ரூபாய் 51 கோடியும், தோட்டக்கலை விளைபொருட்களை மதிப்புக்கூட்டி விற்பனை செய்ய 597 சிப்பம் கட்டும் அறைகள் அமைக்க ரூபாய் 11 கோடியே 94 இலட்சமும், 160 துணை வேளாண்மை விரிவாக்க மையங்கள் புணரமைக்க ரூபாய் 48 கோடியும், கடந்த ஆண்டு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் குடுமியான்மலை, ஈச்சங்கோட்டை, வாழவச்சனூர் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்ட வேளாண் கல்லூரிகள், திருச்சிராப்பள்ளி, மகளிர் தோட்டக்கலை கல்லூரி உட்பட, ஆராய்ச்சி மையங்கள் மற்றும் வேளாண் கல்லூரிகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ரூபாய் 108 கோடியும், வேளாண் துறையின் பணிகள் விவசாயிகளை விரைவில் சென்றடையும் நோக்குடன் 430 வேளாண் உதவி அலுவலர் பணியிடங்களை நிரப்பவும், ஆக மொத்தம் 257 கோடியே 88 இலட்சத்திற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் ஆட்சிபுரியும் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்கள் இன்று விதி 110—ன்கீழ் வாரி வழங்கியுள்ளார்கள். அவர்களுக்கு மீண்டும் என் நன்றியைத் தெரிவித்து, உழவன் சிரித்தால்தான் உலகம் செழிக்கும் என்பதை உள்ளத்தில் கொண்டு உழவர்தம் வாழ்க்கை உயர உன்னத பல திட்டங்களை பார்போற்றும் அளவில் பாங்காகத் தந்திட்ட நமது பாசமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கு வேளாண் பெருமக்களின் சார்பாகவும், எனது சார்பாகவும் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12–05

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம் எனக்கு அனுமதி அளிக்க வேண்டுகிறேன். தினம் தினம் நாட்டு மக்கள் நலம் காண விவசாய மக்களுடைய வாழ்வு உயர, வறட்சியிலும் வளர்ச்சி காண்கின்ற அளவில் இன்றைக்கு தமிழகத்தை (மேசையைத் தட்டும் ஒலி) முன்னோடி மாநிலமாகக் கொண்டு செல்கிறார் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் பொறுப்பேற்ற சுமார் 4 மாதங்களுக்குள் 4 ஆண்டுகளில் செய்ய வேண்டிய சாதனைகளைத் தொடர்ந்து செய்து வருகிறார். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒன்றை மட்டும் நான் இறுதியாகக் கூறிக் கொண்டு விடைபெறுகிறேன். மாண்புமிகு

[திரு. இரா. துரைக்கண்ணு] [2017 ஜூலை 11

தமிழக முதல்வர் அவர்கள் செய்ததை இந்த மாமன்றத்தில் நான் பதிவு செய்தாக வேண்டும். ஏனென்று சொன்னால், எல்லா விதத்திலும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் தமிழர்களுடைய வளர்ச்சிக்கும், தமிழக மக்களுடைய வளர்ச்சிக்கும் பாடுபட்டு வருகிறார், இரவு பகல் பாராது உழைத்து வருகிறார். அனைத்துத் தரப்பு மக்களின் வாழ்வாதாரம் உயர்வதற்கு பாடுபட்டு வருகிறார் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள். தண்ணீர் கிடைக்க அண்டை மாநிலத்தைக் கெஞ்சி வேண்டிக் கேட்டோம். தண்ணீர் கிடைக்கவில்லை. மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வாதாடி வென்ற அந்த உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி, நடுவர் மன்றத் தீர்ப்பின்படி நமக்குக் கிடைக்க வேண்டிய நீரைக் கேட்டோம். அதுவும் கிடைக்கவில்லை. ஆனால், தமிழக மக்களின்பால் நல்லெண்ணம் கொண்ட, அவர்பால் சகோதர பாசம் கொண்ட நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் மாண்புமிகு அமைச்சர்களை அழைத்து, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் எல்லோரையும் அழைத்து, நாம் அண்டை மாநிலத்தைக் கேட்டோம், உச்ச நீதிமன்றத்தைக் கேட்டோம், இன்னும் தண்ணீர் கிடைக்கவில்லை, நாம் இறைவனைக் கேட்போம் என்று சொல்லி, தமிழகத்திலுள்ள அனைத்து சிவாலயங்களிலும் வருண யாகம் செய்ய வேண்டுமென்று எல்லோருக்கும் ஆணையிட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) நாம் இறைவனிடம் கையேந்தினோம். அதன் அடிப்படையில்தான், தொடர்ந்து 2 மாதங்களாக அனைத்து மாவட்டங்களிலும் மழை பெய்து கொண்டிருக்கிறது. இன்னும் சொல்ல வேண்டுமென்று சொன்னால், வறட்சியைக் கண்டு கொண்டிருந்த இந்த சென்னை மாநகரத்தில் இன்று மழை பெய்து கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அன்னைத் தமிழகத்தின் வருங்காலத்தை, வளர்ச்சிப் பாதையிலே வழிநடத்திட வழிவகுத்துக் கொடுத்திருக்கின்ற மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியோடு, பாரத ரத்னா புரட்சித்

2017 ஜூலை 11] [திரு. ஆர்.பி. உதயகுமார்]

தலைவர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு ஆண்டை முன்னிட்டு, பழமையான மதுரை ஆட்சியர் அலுவலகக் கட்டடத்திற்குப் புதிய பொலிவூட்டிட 26.62 கோடி ரூபாய் செலவிலே கூடுதல் அலுவலகக் கட்டடம் மற்றும் நாமக்கல் மாவட்டம், ஈரோடு மாவட்டம் ஆகிய மாவட்டங்களுக்கும் புதிய கூடுதல் கட்டடங்களோடு, ஒரு புதிய புரட்சியாக, யுகப் புரட்சியாக தமிழ்நாடு மாநிலப் பேரிடர் மீட்புப் படை என்கிற அந்தப் படையை பிரத்யேகமாக உருவாக்குவதற்கு 15 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு, 52.40 கோடி ரூபாயிலே தகவல் தொடர்பு சாதனங்களைப் பல்வேறு துறைகளுக்கு பேரிடர் மேலாண்மை நிதியின் வாயிலாக வழங்குவதற்கும் அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார்கள். இப்படி தமிழக மக்களுடைய நீண்டகால எதிர்பார்ப்புகளை எவருமே எதிர்பார்க்க முடியாதபடி மின்னல் வேகத்திலே இந்த அவையிலே அறிவித்து, முத்து முத்தான அறிவிப்புகளைத் தந்திருக்கிற, நம்முடைய முத்தான முதலமைச்சர் அவர்களுக்கு மதுரை (மேசையைத் தட்டும் ஒலி) மாவட்ட ஒட்டுமொத்த மக்களின் சார்பாகவும், என்னுடைய சார்பாகவும், எங்கள் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் உள்ளிட்ட மதுரை மாவட்ட சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பாகவும் கோடானுகோடி இதயத்து நன்றியைத் தெரிவித்து, வணங்கி அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.சி. கருப்பணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘தட்டுங்கள் திறக்கப்படும், கேளுங்கள் கொடுக்கப்படும்’ என்கின்ற பழமொழிக்கேற்ப, இன்றைக்கு எங்கள் தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் அவர்கள் கோவை நாட்டுத் தங்கம், கொங்கு நாட்டுச் சிங்கம், எங்கள் மாவட்டத்திலுள்ள அனைத்துத் துறை அலுவலகங்களையும் எங்கோ மூலை முடுக்கில் இருக்கின்ற அலுவலகங்கள் அனைத்தையும் ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலேயே கட்டுவதற்கு 52 கோடியே 96 இலட்சம் ரூபாய் ஒதுக்கிக் கொடுத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய சார்பாகவும், என்னுடைய மாவட்டத்தின் சார்பாகவும், நெஞ்சார்ந்த வாழ்த்துகளையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றேன். நன்றி, வணக்கம்.